Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-01 | 16-12-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-302



தைப்பொங்கல் வரை 15% வீதம்
விசேட சேவைக் கழிவுடன்
உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V. பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 விநாயகர் வீதி, ஊரெழு.
(சி-13511)

## நமது ஈழநாடு அலுவலகத்தில் படையினர் சல்லடைபோட்டு தேடுதல்

### ஊழியர்கள் மீதும் கடும் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் நமது ஈழநாடு நாளேட்டின் அச்சகம் மற்றும் அலுவலகத்திற்குள் அத்துமீறி உள்நுழைந்து சிறிலங்காப் படையினர் தேடுதல் என்ற பெயரில் கெடுபிடிகளை மேற்கொண்டுள்ளனர். நாவலர் வீதியில் அமைந்துள்ள இந்த அலுவலகத்திற்குள் புகுந்த படையினர், அரை மணி நேரத்திற்கும் மேலாக தேடுதல் நடாத்தியதுடன், அதன் ஊழியர்களையும் அச்சுறுத்தியுள்ளனர்.

அலுவலகத்திற்குள்ளும், அச்சகத்திற்குள்ளும் தீவிர தேடுதலை நடாத்திய படையினர், ஊழியர்களைப் பல்வேறு கேள்விகளைக் கேட்டு அச்சுறுத்திய (IV ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் இராணுவம் சுற்றிவளைத்துத்தேடுதல்

### பொதுமக்கள் மீது கடும் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பல பகுதிகளிலும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றையதினம் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டு மக்கள் இயல்பு வாழ்க்கையை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதி வலிகாமம் மற்றும் வடமராட்சி எனப் பரவலாக மேற்கொள்ளப்பட்ட சிறிலங்கா இராணுவத்தின் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளில் படையினர் மக்களை அச்சுறுத்தும் வகையில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டதுடன் வீடுகளையும் தீவிரமாக சோதனைக்குட்படுத்தியுள்ளனர். இதனையடுத்து மக்கள் அங்கு பீதியடைந்து காணப்படுகின்றனர். நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் நீராவியடி, நாவலர் (IV ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். இல் நேற்று பொங்கி எழும் மக்கள் படை கண்காணிப்புக்குழு நேரில் சந்தித்துப்பேச்சு

## இராணுவம் அடாவடியை நிறுத்தாவிடில் போராடத் தயாராக இருப்பதாக அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா இராணுவத்தினர் தமது அடக்குமுறைகளைக் கட்டுப்படுத்தி மக்களின் இயல்பான வாழ்விற்கு வழிவிடாவிடில் இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராடத் தயாராக இருப்பதாக நேற்று யாழ்.இல் கண்காணிப்புக் குழுவினரை நேரில் சந்தித்த பொங்கி எழும் மக்கள் படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.**



பொங்கியெழும் மக்கள் படையின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதிகளுக்குமிடையேயான சந்திப்பு ஒன்று நேற்று மாலை 4.00 மணியளவில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தற்பொழுது யாழ்.குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், அச்சுறுத்தல்கள், கைதுகள், பொதுமக்களின் இயல்பான நடமாட்டத்திற்கும் தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுக்கும் வண்ணமாய் இராணுவ பிரசன்னம், மாணவர்கள் (IV ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் வாகனம் ஓமந்தையில் படையினரால் தடுப்பு

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் வாகனத்துடன் விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்படவிருந்த செய்மதி தகவல் பரிமாற்றுக் கருவியை ஓமந்தைச் சோதனைச் சாவடியில் சிறிலங்கா இராணுவத்தினர் தடுத்துள்ளனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வாகனங்கள் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் சோதனையிடப்படுவதில்லை. நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் கண்காணிப்புக் குழுவின் வாகனம் புலிகளின் பிரதேசத்தை நோக்கிச் சென்றுள்ளது.

கண்காணிப்புக் குழுவிற்குச் சொந்தமானது என்று காண்பிக்கும் வகையில் அந்த வாகனத்துடன் மற்றொரு ட்றக் வண்டியும் சென்றுள்ளது.

ட்றக் வண்டியை தடுத்த இராணுவ அதிகாரிகள் வாகனத்தைச் சோதனை செய்துள்ளனர்.

வடக்கிற்கு பொருட்களைக் கொண்டு செல்வதாக ட்றக் வண்டியின் சாரதி தெரிவித்துள்ளார். வாகனத்தில் அதிசக்தி வாய்ந்த செய்மதி ரக அன்டெனா இருந்துள்ளது.

இந்தப் பொருட்கள் கொண்டு செல்வது தடை செய்யப்பட்டிருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்தனர். ஆனால், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே அதனைக் கொண்டு வந்ததாகக் கூறிய சாரதி வாகனத்தை திருப்பிக்கொண்டு சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யுத்த நிறுத்த காலத்தில்கூட தமிழர் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படவில்லை!

### ஐரோ.ஆணைக்குழுப் பிரதிநிதிகளிடம் சம்பந்தன் வலியுறுத்து

(கொழும்பு)

யுத்த நிறுத்த காலத்தில்கூட தமிழர்களுக்கு அரசியல் ரீதியாகவோ மனிதாபிமான ரீதியாகவோ எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என தமிழ் கூட்டமைப்பினர் ஐரோப்பிய ஆணைக்குழுவினருக்குத் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் விசேட பிரதிநிதிகளுக்கும் தமிழ் கூட்டமைப்பினருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

கொழும்பிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது ஐரோப்பிய ஆணைக்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிய வலயப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஷரிஜேன்சின் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் குழுத்தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இது குறித்து இரா. சம்பந்தன் கூறுகையில், இதில் வடக்கு கிழக்கின் தற்போதைய நிலை குறித்தும், இதற்கான காரணங்கள் குறித்தும் தெளிவாக அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். யுத்தநிறுத்த காலத்தில் கூட தமிழர்களுக்கு அரசியல் ரீதியாகவோ மனிதாபிமான ரீதியாகவோ எவ்விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. சமாதானப் பேச்சு சம்பந்தமாக ஸ்திரமான நிலை தற்போது இல்லை. இதனை எவரும் ஏற்றுக்கொள்ள முடியாது ஐரோப்பிய ஒன்றியம் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். உண்மையான (IV ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணவேண்டும்

### மகிந்த, ரணில் சந்திப்பில் இணக்கம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமே தீர்வு காண்பதெனவும், சமாதானப்பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிப்பதெனவும் சனாதிபதி மகிந்தராஜபக்ஷவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது இணக்கம் காணப்பட்டுள் (IV ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே வெளிவிவகார அமைச்சரை மங்கள சமரவீர சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளின் ஏற்பாட்டாளர்களாக நோர்வே தொடர்ந்தும் செயற்படுமென சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

ஹொங்கொங்கில் நோர்வே வெளிவிவகார அமைச்சரை நேற்றுச் சந்தித்தபோதே வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர இவ்வாறு கூறினார்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

இணையத்தளங்களை உருவாக்கக் கூடிய உயர்கற்கை நெறி

**Dreamweaver MX**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகட்கு:

வின்நெற் கணனி பயிற்சி நிலையம் டிப்போவீதி, கிளிநொச்சி (சி.13074)

**தவறிவிட்டது**

கஜமுகன் அச்சகத்திற்கும் மல்லாவி மத்திய கல்லூரிஊடாகவுள்ள I.C.R.C இற்கும் இடையில் கைச் சங்கிலிஒன்று தவறவிடப்பட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் க.இராசதுரை இலக்கம் 542, மல்லாவியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6018)


# பேருந்து விபத்து 13 பேர் காயம்!

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற பயணிகள் பேருந்துஇரண்டு ஒன்றுடன் ஒன்று மோதியதில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு ஊரணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி தேவராஜன் தெரிவித்தார். (32)

# சுகாதாரத்தொண்டர்களுக்கு பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கலும்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவையினரின் அனுசரணையுடன் வேள்ட்விசன் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான விசேட பயிறிசிநெறி நிறைவும் சான்றிதழ் வழங்கலும் நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

நேற்றுப்பகல் 11.30 மணிக்கு கிளிநொச்சி அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட வேள்ட்விசன் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் வி.பிறேம்குமார் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் மங்கலவிளக்கை பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் நந்தகுமார், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன உதவிப்பணிப்பாளர் திலகன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையைத்தொடர்ந்து சிறப்புரை இடம்பெற்றது. சிறப்புரைகளை கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமார், நலவாழ்வு அபிவிருத்திநிறுவன உதவிப்பணிப்பாளர் திலகன், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் குணரட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து வேள்ட்விசன் நிறுவனத்தால் கடந்த நான்கு நாட்கள் நடத்தப்பட்ட பயிற்சிநெறிக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. 114 சுகாதாரத்தொண்டர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.இவர்களுக்கு ஆரம்பமருத்துவம், கற்பவதிகளுக்கான கற்பகாலப்பராமரிப்பு, போசாக்கு, தாதியர்பயிற்சி, சுகாதாரம், முதலுதவி போன்ற பல்வேறு பயிற்சிகளும் விரிவுரைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி பயிற்சிகள் அடிப்படைப் பயிற்சி, சிறப்புப்பயிற்சி என இரு வகையாகப்பிரித்து வழங்கப்பட்டது. இரு பயிற்சிகளையும் நிறைவு செய்த 114 சுகாதாரத்தொண்டர்களுக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.சான்றிதழ்களை நிகழ்வில் கலந்த சிறப்பு விருந்தினர்கள் வழங்கிக்கௌரவித்தனர். சான்றிதழ்பெற்ற அனைத்து சுகாதாரத்தொண்டர்களுக்கும் வன்னி மாவட்ட சென்யோன்ஸ் அன்புலன்ஸ் முதலுதவிப்படைப்பிரிவுஆணையாளர் சிறீதரன் எழுதிய முதலுதவி நூல் வழங்கப்பட்டது. (லோ.கு)





# எழுதுனர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

01. குடி.?ட்டு இலக்கம் :– 302 – 14

02. சம்பள அளவுத்திட்டம் :– 7500 – 70X10 – 75X10 – 8950

03. வயதெல்லை :– 18 – 45 வரை

(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

04. கல்வித்தகைமை :– 01. கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுனர் பதவியில் இரண்டு வருட அனுபவம்.

அல்லது

16 ஆவது சம்பளத்திட்டத்தில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது

02. க.பொ.த (சா/த) தரத்தில் இரண்டு அமர்வுக்கு மேற்படாமல் கணிதம், தமிழ் உட்பட ஐந்து திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்கள் சித்தி எய்தியிருத்தல் வேண்டும்.

05. விண்ணப்பிக்கும்போது கல்விச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், நற்சான்றிதழ் பத்திரங்களின் நிழற்படப் பிரதிகள் இணைத்து அனுப்புதல்வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் போது மூலப்பிரதிகள் கொண்டுவருதல் வேண்டும்.

06. கூட்டுறவு சாதாரண தரத்திலும், உயர் தரத்திலும் பயிற்சி பெற்று கூட்டுறவுத்துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

07. விண்ணப்ப முடிவுத்திகதி :– 24.12.2005 நண்பகல் 12.30

08. நேர்முகப் பரீட்சை :– 27.12.2005ஆம் திகதி காலை 10 மணிக்கு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைமைப் பணிமனையில் நடைபெறும். தனிப்பட்ட முறையில்விண்ணப்பதாரிக்கு நேர்முகப் பரீட்சை தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
**கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு.**

(6962)


# முல்லை. அரச அதிபரின் மாதாந்த கலந்துரையாடல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் மாதாந்தக் கலந்துரையாடல்கள் எதிர்வரும் 19.ஆம் 20ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக முல்லை அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் மாவட்டவிவசாயக் குழுக்கூட்டம் 19ஆம்திகதி முற்பகல் 9.30மணிக்கும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம 19 ஆம்திகதி 11.30 மணிக்கும், உலக உணவு வேலைத்திட்ட மீளாய்வுக் குழுக்கூட்டம் 19ஆம் திகதி 12.00மணிக்கும், சுனாமி வீடமைப்புத் திட்டமீளாய்வுக் குழுக்கூட்டம்19ஆம் திகதி 2.00மணிக்கும், அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் 20ஆம் திகதி முற்பகல் 9.30மணிக்கும், சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்கூட்டம் 20ஆம்திகதி 11.30மணிக்கும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக் கூட்டம் 20 ஆம்திகதி12.30 மணிக்கும் நடைபெறவுள்ளதெனவும் இந்த நேர ஒழுங்கின்படி அனைத்து திணைகளத் தலைவர்களையும் தவறாது நடைபெறவுள்ள கூட்டத்திற்கு சமுகம் தருமாறும் கேட்டுள்ளார். (20)


# Visitalk.net

**Calling Centre with net cafe**

24 hour service

* முற்றிலும் குளிரூட்டப்பட்ட ரம்பியமான சுழலில் செய்மதி இணைப்புக்களின் மூலம் வேகம்மிக்க கணனிகளுடன் சஞ்சரித்துள்ளது.
* Internet Browsing - I hour 50/=**Only** (அங்கத்தவர்களாக இணைபவர்களுக்கு மேலும் பல சலுகைகள்)
  * வெளிநாட்டு அழைப்புக்கள் 6\= மட்டும்
* Video conterence Net Meeting மூலம் உலகெங்கிலும் உள்ள உறவுகளை பரஸ்பரம் பார்த்துக் கொண்டே பேசலாம்
  * Net 2phone,Delta three, Accounts

  Internet pho ne இற்கான கருவிகளும் அவற்றை உபயோகிப்பதற்கான ஆலோசனைகளும்
  * Max home Calling Card
* Printing, Scaning, CD writing

மேற்கூறிய அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் நீங்கள் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**1ஆம் மாடி, பலாலிவீதி, வீரகத்திப்பிள்ளையார் ஆலயமுன்னால், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.**

**IST FLOOR, 315A, PALALY ROAD, PARAMESWARA JUNCTION, THIRUNELVELY**

(சி.13567) T.P:- 021-222 6637 **e.mail - visitalknet@yahoo.com**



**UNOPS** United Nations Office for Project Services

# EXPRESSIONS OF INTEREST

The sri lanka project Iimplementation Facility of the United Nations office for project Services seeks expressions of interest for the provision of individual consulting and contract services in the following subject areas:

**Operations and Procurement Services**

For Field office in kilinochchi andSub-office in jaffna we seek expressions of interest from individuals with relevant experience as:

* Finance Assistant
* Finance Clerk
* Logistics Assisstant

**Engineering Services:**

For multiple building reconstruction projects in jaffna, Mullaitivu and kilinochchi Districts we seek expressions of interest from qualified individuals:

* Senior Field Engineers
* Technical officers/ structures
* Site Engineers/ structures

Interested and qualified candidates are invited to submit CV, by email or by post, to
field Coordinator
UNOPS Sri Lanka project implementation facility
230, Thirunagar, kilinochchi-unopskili @ unopsmail. org

(சி.13566)

# படையினர் அடாவடியை நிறுத்தாவிடின் கடும் எதிர்விளைவை சந்திக்க நேரிடும்

## யாழ். பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் மக்கள் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்களும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருவதையிட்டு யாழ். கலைப்பீட மாணவர் ஒன்றியம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளதோடு இராணுவத்தினர் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். இன்றேல் பாரிய எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கையும் விடுத்துள்ளது.**

இது குறித்து மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்;

" தற்போதைய நிலைமையில் யாழ்.குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினராலும் பொலிசாரினாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றி வளைப்புக்கள். கைது செய்தல், பொதுமக்களை அச்சுறுத்தல், வீதி மறிப்புக்கள் போன்ற அடாவடித்தனமான செயற்பாட்டினை நாம் ஆழமாக கண்டிப்பதோடு பொதுமக்களின் பாதுகாப்புக்கும் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடிய வகையிலான சிறிலங்காப் படைகளின் காட்டுமிராண்டித்தனமான இந் நடவடிக்கைகளினை உடனடியாக இவர்கள் நிறுத்த வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அண்மைய நாட்களாக குடாநாட்டின் பல இடங்களில் படையினர் சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள் என்ற பெயரில் யுத்தத்தை நோக்கியதான ஒரு சூழ்நிலையினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். படையினரின் இத்தகைய செயற்பாட்டினால் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

தற்போது குடாநாட்டு மக்கள் பல்வேறு விதமான இராணுவக் கெடுபிடிகளுக்கு ஆளாகி வருகின்றார்கள். குறிப்பாக, தற்போது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்தில் எமது மாணவர்களின் மனங்களிலே பயப்பீதியும் உள ரீதியான தாக்கங்களும் ஏற்படக் கூடிய வகையில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அமைந்து காணப்படுகின்றன.

மேலும் எமது பல்கலைக்கழக வளாகத்தினைச் சுற்றி இராணுவ ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்ததுடன் எமது பல்கலைக்கழக மாணவர்களுடைய இருப்பிடங்கள் தொடர்பாகவும் கண்காணித்து வருகின்றனர். இதன் அம்சமாகத்தான் நேற்றைய தினம் காலை 6.00 மணியளவில் யாழ். பிறவுண்வீதிப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதோடு எமது கலைப்பீட மாணவர்கள் மூவர் இருக்கும் ஒரு வீட்டிற்குச் சென்ற படையினர் அவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என்பதை அறிந்த பின்னரும் சோதனை என்ற பெயரில் அம்மாணவர்களினுடைய பாடப்புத்தகங்கள் மற்றும் உடைமைகள் என்பன எடுத்து வீசப்பட்டு சேதமாக்கப்பட்டதோடு அம்மாணவர்களுடைய பல்கலைக்கழக அடையாள அட்டைகளும் படையினரால் பறித்துக் கிழித்தெறியப்பட்டன.

மேலும் குறிப்பிட்ட அம்மாணவர்கள் படையினரால் துப்பாக்கி முனையிலே கடுமையாக மிரட்டப்பட்டுள்ளனர். படையினரின் இத்தகைய கேவலமான செயற்பாட்டினை நாம் கண்டிப்பதோடு அதனை இவர்கள் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

சிறிலங்காப்படையினரின் அப்பாவிப் பொதுமக்கள் மீதான இத்தகைய கெடுபிடிகளினை நேரடியாகக் கண்டும் வாய்மூடி மௌனித்திருக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரது செயற்பாடு எமக்குக் கவலை தருவதாக அமைகின்றது.

படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் தொடரும் பட்சத்தில் படையினராலேயே தடுக்க முடியாத பெரும் மாணவர் போராட்டத்தினையும், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் படையினர் முகம் கொடுக்க வேண்டியநிலை ஏற்படலாம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உந்துருளியில் சென்றோர் மீது படையினர் தாக்குதல்

## – நாவற்குழியில் சம்பவம்

(தென்மராட்சி)

நாவற்குழிப் பாலத்தில் உந்துருளியில் பயணம் செய்த இளைஞர்கள் இருவர் ரோந்து வந்த சிறிலங்காப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

நாவற்குழிப் பாலத்தில் நேற்று முன்தினம் மாலை ஐந்து மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வேகமாகப் பயணித்த உந்துருளியைப் பாலத்தின் ஒரு பகுதியில் நின்றிருந்த படையினர் மறித்தவேளை சற்றுத் தள்ளி நின்ற உந்துருளியில் வந்த இருவரையும் கொட்டான் தடிகள் கொண்டு படையினர்தாக்கி காயப்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது. (28)

# அடுத்த ஆண்டில் பொதுத்தேர்தல்?

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் பொதுத்தேர்தலை நடாத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த ஆண்டின் முற்பகுதியில் பாராளுமன்றத்தைக் கலைக்க இருப்பதுடன், சிங்கள, தமிழ் புத்தாண்டிற்கு முன்னர் பொதுத்தேர்தலை நடாத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பொதுத்தேர்தலை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ள சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னத்தில் போட்டியிடுவதற்கு முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும், எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜே.வி.பி யினரைக் விலக்கி சிறிலங்கா சுதந்திரக் கட்சி அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியின் சின்னத்திலேயே போட்டியிட வேண்டுமென, முன்னாள் சனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துவருவதாகவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பொதுத்தேர்தலை அடுத்த ஆண்டின் இறுதிப் பகுதியில் நடாத்த வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், அவருக்கு ஆதரவானவர்களும் இணைந்து மகிந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ரூ. 234 கோடி நிதியுதவியளிக்க சுவீடன் அரசாங்கம் இணக்கம்

(கொழும்பு)

சுவீடன் அரசாங்கத்துடன் 2003ஆம் ஆண்டு சிறிலங்கா அரசாங்கம் கைச்சாத்திட்ட அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான உடன்படிக்கையை நீடிப்பதற்கு சுவீடன் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. அதன்படி 2006-2007ஆம் ஆண்டுகளுக்கான நிதியுதவியாக 234 கோடி ரூபாவை வழங்க சுவீடன் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது தவிர நாட்டின் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும்போதும் சுவீடன் சிறிலங்காவுக்கு உதவத் தயாராகவே உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

சிறிலங்கா நிதியமைச்சு விடுத்த அறிக்கை ஒன்று இது குறித்து தெரிவித்துள்ளது. இதற்கான உடன்படிக்கையில் சிறிலங்கா நிதியமைச்சின் செயலாளர் ஜயசுந்தர, சிறிலங்காவுக்கான சுவீடன் தூதரக அதிகாரி பார்க்கர் துன்பேர்க் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

# புன்னைக்குடாவில் கடற்படைத்தளம் அமைக்கும் திட்டத்தைக் கைவிடுக!

## – மீனவர்கள் கோரிக்கை

ஏறாவூர் புன்னைக்குடாவில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு என்ற போர்வையில் சிறிலங்கா கடற்படையினரின் முகாம் நிறுவப்படுமானால் களுவன்கேணி, புன்னைக்குடா, தளவாய், மற்றும் சவுக்கடி மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடாத அளவு பாதிப்பை எதிர்நோக்க வேண்டிவரும் என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். போர்க் காலத்தில் மீன்பிடித் தொழில் படைத்தரப்பினரால் பாதிக்கப்பட்டது. பின்னர் சுனாமிப் பேரலையாலும், மீனவர்கள் உயிர்,உடைமைகளை இழந்து பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் புன்னைக் குடாவில் கடற்படை முகாம் நிறுவப்படுமானால் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் கடல்வலயப் பாதுகாப்பினை கடற்படையினர் ஏற்படுத்துவதுடன் மீனவர்கள் மீது கட்டுப்பாடுகளையும் மேற்கொள்வர். எனவே புன்னைக்குடா கடற்படை முகாம் நிறுவும் திட்டத்தைக்கைவிட வேண்டுமென இக்கரையோர மீனவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# முஸ்லிம்களின் பாதுகாப்புப் பிரச்சினை குறித்து இணைத் தலைமை நாடுகள் ஆராய வேண்டும்

## – ரவூப் ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 19ஆம் நாள் புறூஸல்ஸ் நகரில் இடம்பெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளிடம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவினை கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியபோதே ரவூப் ஹக்கீம் பிரதிநிதிகளிடம் இவ்வாறு கோரியுள்ளார்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள ரவூப் ஹக்கீமின் வீட்டில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக் குழுவின் தலைவர் ஜீவிலியன் வில்சன், ஐரோப்பிய ஆணைக்குழுவின் சர்வதேச தொடர்புகளுக்கான துணை இயக்குனர் நாயகம் ஹன்ஜீ வான்ஜியன், ஐரோப்பிய ஒன்றியத்தின் புறூஸல்ஸில் உள்ள இலங்கைக்கான அலுவலகர் கிலன் பேள்ட்டன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் கட்சியின் செயலாளர் ஹசன் அலி, எஸ்.நியாமுடின், ஏ.எம்.பாயிஸ், உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் பின் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த ரவூப் ஹக்கீம், நாட்டின் தற்போதைய சூழ்நிலையினைப் பார்க்கின்றபோது, மக்களின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதிலும் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு பொறுப்புக் கூறுவது யார்? என்ற கேள்வி இங்கு எழுகின்றது. இதில் அரசாங்கமே பொறுப்புடையது என்பதை நாம் திட்டவட்டமாகக் கூறுகின்றோம்.

# வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம்; அரசியல் நடவடிக்கைக்கு ஐ.தே. க. தயார்

(கொழும்பு)

வாக்காளர் பட்டியலில் பெயர்கள் நீக்கப்பட்டமை தொடர்பில் அரசியல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கப்பட்டிருந்தமை குறித்து இது வரை இரண்டு இலட்சம் முறைப்பாடுகள் வரை கிடைத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கடந்த சனாதிபதித்தேர்தலின் போது சுமார் நான்கு இலட்சம் பேரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தமை தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக மக்களைத் தெளிவுபடுத்துவதற்காக அடுத்த சனவரி மாதம் முதல் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தா . (32)

# படையினரின் ஊர்திகள் பயணிக்கும்போது மக்களின் ஊர்திகள் பயணிக்கத் தடைவிதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில சிறிலங்காப்படையினரின் ஊர்திகள் வீதிகளால் செல்லும்போது பொதுமக்களின் ஊர்திகள் பயணம் செய்வதற்கு சிறிலங்காப்படையினர் தடை விதித்துள்ளனர். போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் இருந்த இந்த நடைமுறையைப் படையினர் மீண்டும் கொண்டு வந்துள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் படையினரால் இத்தடை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. படையினரின் ஊர்தி அணி பயணம் செய்தபோது வீதிகளின் அருகில் பொதுமக்களது ஊர்திகள், உந்துருளிகள், மிதி வண்டிகள் என்பன நிறுத்தப்பட்டு படையினரின் ஊர்தி அணி சென்றபின்பே அனுமதிக்கப்பட்டன.

இதனால் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். இதேவேளை கவச ஊர்தி படையினரின்சுற்றுக் காவல் நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ள அதேவேளை வீதிகளிலும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

# பலாலி விமானத்தள விஸ்தரிப்புத் திட்டத்தை இந்தியா மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

## யாழ். மாவட்ட தே. எ. பேரவை இந். பிரதமருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானத்தளத்தை மேலும் விஸ்தரித்து எமது தாயகப் பிரதேசத்தை அபகரிக்கும் சிறிலங்கா அரசின் கபடத்தனத்திற்கு துணை போகாது இந்திய அரசு தனது திட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனக்கோரி யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை இந்தியப் பிரதமர் மன் மோகன்சிங்கிற்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

ஆண்டாண்டு காலமாக எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த எமது மண்ணை இந்திய உபகண்டத்தின் உதவியுடன் நிரந்தரமாக சுவீகரிக்கும் இலங்கை அரசின் கபடத்தனத்தைக் கண்டிப்பதோடு எந்தவகையிலும் இதை அனுமதியோம் என இந்திய அரசிற்கும் இலங்கை அரசிற்கும் தெரிவுபடுத்த முனைகின்றோம்.

எமது தாயகப் பிரதேசத்தை அபகரிக்கும் நீண்ட நோக்கில் ஆரம்ப காலத்தில் ஓர் இராணுவ முகாமையும், விமானத்தளத்தையும் சிறிலங்கா அரசு ஏற்படுத்தி காலப்போக்கில் அதனை விஸ்தரிக்கும் நோக்குடன் பூர்வீகமாக வாழ்ந்த எமது மக்களை, உறவுகளை விரட்டியடித்து அகதிகளாக்கி இன்று 15 வருடங்களுக்கு மேலாக அப் பிரதேச மக்கள் அகதிகளாக அகதி முகாம்களில் அல்லலுறும் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட 50,000இற்கு மேற்பட்ட மக்கள் தமது சொந்த வாழ்விடங்களை இழந்து இன்று நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த நான்கு வருட சமாதானம் என்பது இம்மக்களின் வாழ்வில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தாத நிலையில் சமாதான செயற்பாடென்பது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துகின்றது.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான வழியிலேயே தீர்வு எனக் கூறி ஆட்சிபீடம் ஏறிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று யுத்தத்திற்கான ஆயத்த நடவடிக்கையை மேற்கொள்வது எமக்கு மிகுந்த ஏமாற்றத்தையளிக்கின்றது.

ஏற்கனவே, எமது மக்களின் வாழ்விடங்களை முற்றுகையிட்டு அபகரித்து அமைத்திருக்கும் ஆக்கிரமிப்புப் படைகளின் விமானத்தள விஸ்தரிப்பு என்பது மீண்டுமொரு யுத்தத்தை ஆரம்பித்து எமது மக்களை கொன்றொழிக்கும் செயற்பாடாக நாம் கருத வேண்டியுள்ளது.

விமானத்தளத்தை மேலும் விஸ்தரித்து எமது மக்களின் பூர்வீக இடத்தை அபகரிப்பதன் மூலம் எமது மக்கள் நிரந்தரமாகவே அகதி முகாம்களில் வாழ்வதற்கான நிலையினையே இந்த சிறிலங்கா அரசானது மேற்கொள்கின்றது.

இந்த சிறிலங்கா அரசின் கபடத்தனமான செயற்பாட்டிற்கு இந்திய அரசானது கைகொடுத்துதவ முன்வந்திருப்பது எமக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கின்றது.

இந்திய அரசானது மீண்டுமொரு முறை இலங்கையரசின் கபட நாடகத்தில் சிக்கி எமக்கெதிரான நிலைப்பாட்டை எடுக்க முற்படுவது எமக்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது. எம்மக்களின் கவலையை இந்திய அரசிற்கும் இந்திய மக்களுக்கும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்திய மக்களுடன் கலாசார, பண்பாட்டு, இன, மத, மொழி ரீதியாக உறவுகளாக வாழ்ந்து வரும் ஈழத் தமிழ் மக்களின் துன்ப துயரங்களைத் துடைக்க இந்திய அரசும் இந்திய மக்களும் முன்வரவேண்டும். இந்திய அரசானது தனது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்து எமது தேச விடுதலைப்போராட்டத்தை அங்கீகரித்து எமது தேசம் விடுதலை பெற அரசியல், ராஜதந்திர ரீதியாக எமக்கு உதவ வேண்டும். இது இந்திய அரசின் உதவி மட்டுமன்று இந்திய அரசின் கடமையாகவும் கருதுகின்றோம் என்றும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (28)

## "நாற்று இதழ்-27" இன்று வெளிவருகிறது

(அலுவலகசெய்தியாளர்)

பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் வெளியீடான "நாற்று இதழ்-27" இன்று வெளிவந்துள்ளது.

பொன்னகர் கிராமசேவை அலுவலர் திருமதி ஞானேஸ்வரியுடனான நேர்காணல், அ.காந்தாவின் இருட்குகையினுள் புதையும் வேதனைகள். எனும் கட்டுரை, ச.விதுவின் நான்கு சுவர்களைத்தாண்டி உண்மைச்சம்பவக்கட்டுரை மற்றும் கட்டுரைகள், கவிதைகள்,சிறுகதைகள் என பலசிறப்பு அம்சங்களைத்தாங்கி இவ்விதழ் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வைத்தியநிபுணரின் விசேட வைத்தியசேவை

அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருக்கும் இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மனமோகன் அவர்கள் பின்வரும் தினங்களில் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில்நோயாளர்களைப் பார்வையிடவுள்ளார். சிகிச்சைபெற விரும்புவோர் பொன்னம்பலம் மருத்துவமனை நிருவாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். சிகிச்சை நாளை முதல் வரும் 20ஆம் திகதி வரை காலை 9.00மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கண்காணிப்புக்குழுத்தலைவர்-ஞானம் விளக்குவைத்தகுளத்தில் சந்திப்பு

(வவுனியா செய்தியாளர்)

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் கொக்லண்ட் வவுனியா மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ஞானம் அவர்களை விளக்குவைத்தகுளம் பகுதியில் உள்ள அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுக் காலை 11.15 மணிக்கு ஆரம்பமான சந்திப்பு 30 நிமிடங்கள் நடைபெற்றது. இச்சந்திப்பின்போதுஅண்மைக்கால விவகாரங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. வவுனியாவில் நடைபெறும் குண்டுத் தாக்குதல்கள், ஆட்கடத்தல்கள் போன்றவற்றிற்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என கண்காணிப்புக்குழுத்தலைவரிடம் ஞானம் உறுதிபடத்தெரிவித்துள்ளார்.

அத்துடன் வவுனியாவில் நடைபெறும் அசம்பாவிதங்களை அடுத்துப் படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல்களையும், கெடுபிடிகளையும் மேற்கொள்கின்றனர். இதனைத் தடுக்கபோர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஞானம் கண்காணிப்புக்குழுத்தலைவரை மேலும் கேட்டுக்கொண்டார். (10)

### யுத்த...

நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளோம் என்றார்.

### நோர்வே...

இலங்கை அரசாங்கம் சமாதான செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு வெளிப்படுத்தி உள்ள பதிவிற்கு நோர்வே வெளிவிவகார அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சூல்கெய்ம் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது குறித்துக் கவனம் செலுத்துவதற்கு எதிர்காலத்தில் இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

- நமது ஈழநாடு காரியாலயத்தினுள் -

## படையினர் அத்துமீறி நுழைந்தமை குறித்து கண்காணிப்புக் குழு விசாரணை

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தீவிர சோதனை இடப்பட்டது குறித்து இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழு தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஒரு அதிகாரி உட்பட ஏழு படையினர் அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஆசிரியர்பீடம் அலுவலகப் பகுதியில் உள்ள கோப்புக்கள், மற்றும் அச்சுக் கூடப்பகுதி போன்றவற்றை சல்லடைபோட்டுத் தேடியதுடன் சுவர்களில் தொங்கவிடப்பட்டிருந்த படங்களையும் அகற்றியதுடன் அலுவலகத்தில் இருந்த ஊழியர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டமை தெரிந்ததே. இச்சமயத்தில் அலுவலகத்திற்கு வெளியே இருபதுக்கு மேற்பட்ட படையினர் நின்றிருந்தனர்.

படையினர் அத்துமீறி நுழைந்து தேடுதல் நடத்திவிட்டுசென்றபின் கண்காணிப்புக்குழுவினர் குறிப்பிட்ட பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்று நடந்தவற்றைக் கேட்டறிந்தனர்.

### இனப்பிரச்சினை....

ளது.சனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் குழுவினருக்கும் எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க குழுவினருக்கும் இடையில் அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் சனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும் அமைச்சர்களான நிமல் சிறிபாலடிசில்வா, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கட்சியின் உபதலைவர் கருஜெயசூரிய,பேராசிரியர் ஜி.எல், பீரிஸ், மைக்கல் யோசெப்பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### யாழ்.இல்....

மற்றும் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான அச்சுறுத்தல், தாக்குதல், கொலை மிரட்டல்கள் தொடர்வதை தொடர்ந்து அனுமதிக்க முடியாது என்றும் இத்தகைய ஒடுக்கு முறைகளையும், சிறிலங்கா இராணுவத்தின் அடக்கு முறைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மக்களின் இயல்பான வாழ்விற்கு வழிசமைக்கப்படாவிடில் தொடர்ந்தும் சிங்கள ஆயுத ஒடுக்கு முறைக்கு எதிராக கிளர்ந்து எழுந்து பொங்கியெழும் மக்கள் படை போராடத் தயாராக இருக்கின்றது என்றும் இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொங்கி எழும் மக்கள் படையைச் சேர்ந்த சுமார் 75 பேர் சென்று யாழ். கோவில் வீதியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைச் சந்தித்தனர். இவர்களில் இருவர் கண்காணிப்புக் குழுவின் மூன்று பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இராணுவத்தினரின் மக்கள் மீதான அடாவடித்தனங்களைச் சுட்டிக்காட்டி இவை தொடரின்இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று கூறியுள்ளதோடு, யாழ். குடாநாட்டில் இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தியது தாம்தான் என்றும் மக்கள் படையினர் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

இவற்றிற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுவினர் தாம் இராணுவத்துடனும், அரசாங்கத்துடனும் பேசி சுற்றிவளைப்புத் தேடுதல், மக்கள் மீதான இராணுவத்தின் அடாவடித்தனங்களை நிறுத்துவதாகவும், தங்களுக்கு கால அவகாசம் வழங்குமாறு கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வலிகாமம்.....

வீதி, பெருமாள் கோவில் பகுதி, கலட்டி, மற்றும் கச்சேரியடி, புங்கங்குளம், பழையபூங்கா, சுண்டிக் குளி, பாண்டியன்தாழ்வு மற்றும் வலிமேற்கில் உள்ள சங்கானை, சுழிபுரம், பொன்னாலை, வட்டுக்கோட்டை என அடுத்தடுத்து இச்சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

பவல் கவச வாகனங்கள், துருப்புக்காவி வாகனங்கள் மற்றும் உந்துருளிப் படை அணிகள் எனப் பெருமெடுப்பில் நடத்தப்பட்ட இச்சுற்றிவளைப்புகளில் பல நூற்றுக்கணக்கான கொமாண்டோக்கள் ஈடுபடுத்தப்பட்டன.

இப்படைகள் வீடுகளுள் நுழைந்து சல்லடைபோட்டுத் தேடுதல்களை நடத்தியதுடன் வீடுகளில் தங்கியிருப்போரது பெயர் விபரங்கள், தொழில் நிலைமைகள் மற்றும் வெளி இடங்களுடனான தொடர்பாடல்கள் என்பன பற்றி விசாரணை செய்து விபரங்களையும் சேகரித்துச் சென்றுள்ளனர்.

சில இடங்களில் பொதுமக்களை வரிசையில் நிற்க வைத்து அவர்கள் மீது சோதனைகளையும், விசாரணைகளையும் நடத்தியதுடன் வீதியால் செல்வோரை வழி மறித்து [illegible]ணங்களுக்குரிய ஆவணங்களைச் சோதித்தல், அடையாள அட்டைச் சோதனை என்பனவற்றை மேற்கொண்டதுடன் உந்துருளி முதல்பாரவூர்திகள் வரை சல்லடையாக சோதனை செய்யப்பட்டன.

இதைவிட இச்சுற்றிவளைப்புகளின்போது படையினர் மீது நடத்தப்படும் தாக்குதல்களுடன் தொடர்புள்ளவர்களை தமக்கு இனம் காட்டுமாறும் படையினரை குடாநாட்டைவிட்டு வெளியேறக் கோரும் பிரசுரங்களை வெளியிடுபவர்கள், சுவரொட்டிகளை ஒட்டுவோர் பற்றி தகவல் தருமாறும்கோரி பொதுமக்களை மிரட்டும் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டனர்.

யாழ். குடாநாட்டில் பரவலாக தினமும் மேற்கொள்ளப்பட்டுவரும் சுற்றிவளைப்புக்கள் மற்றும் தேடுதல்களால் மக்கள் மத்தியில் பெரும் பீதி உருவாகியுள்ளது.

வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் தீவிர சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர். கரணவாய், மண்டான், தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் கெருடாவில் ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்த படையினர் அப்பகுதிகளில் தீவிர தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டதுடன் மக்களையும் துன்புறுத்தியுள்ளனர்.

இப்பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்ற படையினர் ஏற்கனவே இராணுவத்தால் வழங்கப்பட்டிருந்த குடும்ப விபரங்கள் அடங்கிய குடும்ப அட்டைகளை வீட்டு உரிமையாளர்களிடமிருந்து பெற்று தற்போது யாரேனும் புதிதாக உள்ளனரா எனத் துருவித்துருவி ஆராய்ந்துள்ளனர்.

இதேவேளை, இப்பகுதி வீடுகளில் இருந்து தமிழீழ தேசியத் தலைவரின் படங்களை அகற்றுமாறும் இராணுவத்தினர் பொதுமக்களை அச்சுறுத்தியதாகவும், விடுதலைப்புலிகளின் நடமாட்டங்கள் இங்கு நடைபெறுகின்றதா? எனவும் மக்களை இவர்கள் கேட்டு அச்சுறுத்தியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

(33, 27, 37, 28)

### நமது.....

அதேவேளை அவர்களின் அடையாள அட்டைகளையும் காட்டுமாறு வற்புறுத்தியுள்ளனர்.

அலுவலகத்திற்குள் தேடுதல் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளை, அலுவலகத்திற்கு வரும் வீதிகளிலும் தடைகளை ஏற்படுத்தி வீதியால் சென்றோரையும், சோதனையிட்ட படையினர், அடையாள அட்டை வைத்திருக்காத பலரை நீண்ட நேரம் தடுத்து வைத்திருந்தனர்.

நமது ஈழநாடு அலுவலத்திற்கு அண்மையாகவுள்ள வலம்புரி நாளேட்டின் அலுவலக ஊழியர்களும் படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பத்திரிகை நிறுவனங்களையும் ஊடகவியலாளர்களையும் இலக்கு வைத்துப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கையானது ஊடக சுதந்திரத்தை முடக்கிவிடும் முயற்சியின் ஒரு கட்டமாகும் என வடஇலங்கை ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சமாதான சூழ்நிலையில் இடம்பெற்றுள்ள இவ்வாறான சம்பவம் யாழ்ப்பாணத்தில் ஊடகவியல் துறையின் எதிர்காலம் குறித்துக் கேள்வியை எழுப்பியுள்ளதாகவும் வடஇலங்கை ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.